ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் அருளிச்செய்த

# ॥ ப்ரபந்தசாரம் ॥

*This document* has been prepared by*

**Sunder Kidambi**

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# ॥ ப்ரபந்தசாரம் ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

ஆரண நான்கின் பொருளை ஆழ்வார்கள் ஆய்ந்தடைவே⋆
அன்புடனே அம்புவியோர் அனைவரும் ஈடேறவென்று⋆
நாரணனார் தாள்களிலே நாலாயிரம் தமிழால்⋆
நண்ணி உரை செய்தவற்றை நாடி வகை தொகை செய்தாய்⋆
பூரண மாஞானியர் சேர் பொங்கு புகழ்த் தூப்புல் வரும்⋆
புனிதன் என்றும் பிள்ளை என்றும் புவியோர் புகழ் வேங்கடவா⋆
தாரணியோர் இங்குகக்கச் சாற்றிய நல் ப்ரபந்தசாரம்
தனை உரைத்து⋆ வாழ மனம் தந்தருளாய் என்றனக்கே

ஆதி மறை ஓதி மகிழ் அயக்கிரிவர் தம் அருளால்⋆
அன்புடனே தூப்புல் நகர் அவதரித்தே இங்கு வந்த⋆
வாதியரை வென்று வந்து வன் புவிமேல் எதிராசர்⋆
வாழ்வுறு நல் தரிசனத்தை வண்மையுடனே வளர்த்து⋆
நீதி நெறி தவறாமல் நிறுத்தியிடும் வேங்கடவா⋆
நேசமுடன் ஆழ்வார்கள் நிலைகளை எல்லாம் உணர்ந்து⋆
சாது சனம் வாழவென்று சாற்றிய நல் ப்ரபந்தசாரம்
தனை உரைத்து⋆ வாழ மனம் தந்தருளாய் என்றனக்கே

‡ஆழ்வார்கள் அவதரித்த நாளூர் திங்கள்⋆
அடைவு திருநாமங்கள் அவர் தாம் செய்த⋆
வாழ்வான திருமொழிகள் அவற்றுள் பாட்டின்⋆
வகையான தொகை இலக்கம் மற்றும் எல்லாம்⋆
வீழ்வாக மேதினி மேல் விளங்க நாளும்⋆
விரித்துரைக்கும் கருத்துடனே மிக்கோர் தங்கள்⋆

www.prapatti.com

நீள் பாதம் நிரந்தரமும் தொழுது வாழ்த்தும்⋆
 நேசமுடன் அடியேன் தன் நெஞ்சு தானே (1)

அருள் மிகுத்த ஒரு வடிவாய்க் கச்சிதன்னில்⋆
 ஐப்பசீ மாதத் திருவோணத்து நாளில்⋆
பொருள் மிகுத்த மறை விளங்கப் புவியோர் உய்யப்⋆
 பொய்கைதனில் வந்துதித்த புனிதா! முன்னாள்⋆
இருளதனில் தண் கோவல் இடைகழிச் சென்று⋆
 இருவருடன் நிற்கவும் மால் இடை நெருக்கத்⋆
திரு விளக்காம் எனும் வையந்தகளி நூறும்⋆
 செழும் பொருளா எனக்கருள் செய் திருந்த நீயே (2)

கடன்மல்லைக் காவலனே! பூதவேந்தே⋆
 காசினி மேல் ஐப்பசியில் அவிட்ட நாள் வந்து⋆
இடர் கடியும் தண் கோவல் இடைகழிச் சென்று⋆
 இணையில்லா மூவருமாய் இசைந்தே நிற்க⋆
நடுவில் இவர் ஒருவரும் என்றறியாவண்ணம்⋆
 நள்ளிருளில் மால் நெருக்க நந்தா ஞானச்-
சுடர் விளக்கேற்றிய⋆ அன்பே தகளியான
 தொடை நூறும்⋆ எனக்கருள் செய் துலங்க நீயே (3)

மா மயிலைப் பதியதனில் துலா மாதத்தில்⋆
 வரும் சதயத்தவதரித்துக் கோவலூரில்⋆
தூ முனிவர் இருவருடன் துலங்க நின்று⋆
 துன்னிய பேர் இருள் நீங்கச் சோதி தோன்ற⋆
சேமமுடன் நெடுமாலைக் காணப்புக்குத்⋆
 திருக்கண்டேன் என உரைத்த தேவே⋆ உன் தன்
பா மருவு தமிழ் மாலை நூறு பாட்டும்⋆
 பழவடியேனுக்கருள் செய் பரம நீயே (4)

தைம் மகத்தில் வரும் மழிசைப்பரனே!⋆ மற்றைச்
 சமயங்கள் பல தெரிந்து⋆ மாயோன் அல்லால்
தெய்வம் மற்றில்லை என உரைத்த⋆ வேதச்
 செழும் பொருள் நான்முகன் தொண்ணூற்றாறு பாட்டும்⋆



www.prapatti.com

மெய் மிகுத்த திருச்சந்தவிருத்தப் பாடல்⋆
விளங்கிய நூற்றிருபதும் தப்பாமல்⋆ மெய்யே
வையகத்தில் மறவாமல் உரைத்து வாழும்
வகை⋆ அடியேனுக்கருள் செய் மகிழ்ந்து நீயே (5)

‡முன் உரைத்த திருவிருத்தம் நூறு பாட்டும்⋆
முறையில் வரும் ஆசிரியம் ஏழு பாட்டும்⋆
மன்னிய நற்பொருள் பெரிய திருவந்தாதி⋆
மறவாத படி எண்பத்தேழு பாட்டும்⋆
பின் உரைத்ததோர் திருவாய்மொழி⋆ எப்போதும்
பிழை அற ஆயிரத்தொரு நூற்றிரண்டு பாட்டும்⋆
இந்நிலத்தில் வைகாசி விசாகம் தன்னில்⋆
எழில் குருகை வரு மாறா! இரங்கு நீயே (6)

தேறிய மா ஞானமுடன் திருக்கோளூரில்⋆
சித்திரையில் சித்திரைநாள் வந்து தோன்றி⋆
ஆறிய நல் அன்புடனே குருகூர் நம்பிக்கு⋆
அனவரதம் அந்தரங்க அடிமை செய்து⋆
மாறனை அல்லால் என்று மறந்தும்⋆ தேவு
மற்றறியேன் எனும் மதுர கவியே⋆ நீ முன்
கூறிய கண்ணிநுண் சிறுத்தாம்பதனில் பாட்டுக்⋆
குலவு பதினொன்றும் எனக்குதவு நீயே (7)

பொன் புரையும் வேல் குலசேகரனே!⋆ மாசிப்
புனர்பூசத்தெழில் வஞ்சிக் களத்துத் தோன்றி⋆
அன்புடனே நம் பெருமாள் செம் பொற்கோயில்⋆
அனைத்துலகின் பெரு வாழ்வும் அடியார் தங்கள்⋆
இன்ப மிகு பெருங்குழுவும் காண⋆ மண்மேல்
இருள் இரிய என்றெடுத்த இசையில் சொன்ன⋆
நன் பொருள் சேர் திருமொழி நூற்றைந்து பாட்டும்⋆
நன்றாக எனக்கருள் செய் நல்கி நீயே (8)

பேர் அணிந்த வில்லிபுத்தூர் ஆனி தன்னில்⋆
பெருஞ்சோதி தனில் தோன்றும் பெருமானே!⋆ முன்



www.prapatti.com

சீர் அணிந்த பாண்டியன் தன் நெஞ்சு தன்னில்⋆
தியக்கற மால் பரத்துவத்தைத் திறமாச் செப்பி⋆
வாரண மேல் மதுரை வலம் வரவே⋆ வானில்
மால் கருட வாகனனாய்த் தோன்ற வாழ்த்தும்⋆
ஏரணி பல்லாண்டு முதல் பாட்டு⋆ நானூற்று
எழுபத்தொன்றிரண்டும் எனக்குதவு நீயே (9)

‡வேயர் புகழ் வில்லிபுத்தூர் ஆடிப்பூரம்⋆
மேன்மேலும் மிக விளங்க விட்டுசித்தன்⋆
தூய திருமகளாய் வந்தரங்கனார்க்குத்⋆
துழாய் மாலை முடிசூடிக் கொடுத்த மாதே⋆
நேயமுடன் திருப்பாவைப் பாட்டாறைந்தும்⋆
நீ உரைத்த தையொரு திங்கள் பாமாலை⋆
ஆய புகழ் நூறுடன் நாற்பத்து மூன்றும்⋆
அன்புடனே அடியேனுக்கருள் செய் நீயே (10)

மன்னு மதிள் திருமண்டங்குடி தான் வாழ⋆
மார்கழி மாதக் கேட்டை நாளில் வந்து⋆
துன்னு புகழ்த் தொண்டரடிப்பொடியே!⋆ நீ முன்
துழாய் மாலை பணி அடிமை செய்து நாளும்⋆
தென்னரங்க மணவாளற்கன்பு மிக்குச்
செப்பிய⋆ நல் திருமாலை நாற்பத்தைந்தும்⋆
பன்னிய நல் திருப்பள்ளியெழுச்சி பத்தும்⋆
பழவடியேனுக்கருள் செய் பரிந்து நீயே (11)

உலகறிய மலி புகழ்க் கார்த்திகை மாதத்தில்⋆
உரோகிணி நாள் உறந்தை வளம் பதியில் தோன்றித்⋆
தலம் அளந்த தென் அரங்கர் பால்⋆ உலோக
சாரங்க மாமுனி தோள் தனிலே வந்து⋆
பல மறையின் பொருளால் பாண் பெருமாளே!⋆ நீ
பாதாதி கேசமதாய்ப் பாடித் தந்த⋆
சொலவமலனாதிபிரான் பத்துப் பாட்டும்⋆
சோராமல் எனக்கருள் செய் துலங்க நீயே (12)

‡அறிவு தரும் பெரிய திருமொழி தப்பாமல்⋆
ஆயிரத்தோடெண்பத்துநாலு பாட்டும்⋆
குறியதொரு தாண்டகம் நாலைந்து⋆ ஆறைந்தும்
குலா நெடுந்தாண்டகம் எழுகூற்றிருக்கை ஒன்றும்⋆
சிறிய மடல் பாட்டு முப்பத்தெட்டிரண்டும்⋆
சீர் பெரிய மடல் தனில் பாட்டெழுபத்தெட்டும்⋆
இறையவனே! கார்த்திகையில் கார்த்திகை நாள்⋆
எழில் குரையல் வரு கலியா இரங்கு நீயே (13)

‡தேசம் எலாம் உகந்திடவே பெரும்பூதூரில்⋆
சித்திரையில் ஆதிரைநாள் வந்து தோன்றி⋆
காசினிமேல் வாதியரை வென்று⋆ அரங்கர்
கதியாக வாழ்ந்தருளும் எதிராசா!⋆ முன்
பூசுரர் கோன் திருவரங்கத்தமுதனார்⋆ உன்
பொன் அடிமேல் அந்தாதியாகப் போற்றிப்
பேசிய⋆ நற்கலித்துறை நூற்றெட்டுப் பாட்டும்⋆
பிழை அறவே எனக்கருள் செய் பேணி நீயே (14)

எண்ணின் முதல் ஆழ்வார்கள் மூன்று நூறும்⋆
எழில் மழிசைப்பிரான் இரு நூற்றொரு பத்தாறும்⋆
உண்மைமிகு மாறன் மறை ஆயிரத்தோ-
டுற்ற⋆ இரு நூற்றுத் தொண்ணூறுமாறும்⋆
வண்மையுடை மதுர கவி பத்தும் ஒன்றும்⋆
வஞ்சியர் கோன் நூற்றைந்தும்⋆ பட்டநாதன்
பண்ணியல் நானூற்றேழு பத்து மூன்றும்⋆
பார்க்கோதை நூற்றேழு பத்து மூன்றே (15)

‡பத்தரடிப்பொடி பாடல் ஐம்பத்தைந்தும்⋆
பாணர் புகழ் பத்துடனே பரகாலன் சொல்⋆
அத்தன் உயர் வேங்கடமாற்காயிரத்தோ-
டான⋆ இரு நூற்றோர் ஐம்பத்து மூன்றும்⋆
முத்தி தரும் எதிராசர் பொன் அடிக்கே
மொழிந்த⋆ அமுதர் பாடல் நூறும் எட்டும்⋆

எத்திசையும் வாழ இவர் பாடி வைத்த
இவை⋆ நாலாயிரமும் அடியோங்கள் வாழ்வே (16)

‡வையகம் எண் பொய்கை பூதம் பேயாழ்வார்⋆
மழிசையர்கோன் மகிழ் மாறன் மதுர கவி⋆
பொய்யில் புகழ்க் கோழியர்கோன் விட்டுசித்தன்⋆
பூங்கோதை தொண்டரடிப்பொடி பாணாழ்வார்⋆
ஐயன் அருள் கலியன் எதிராசர் தம்மோடு⋆
ஆற் இருவர் ஓர் ஒருவர் அவர் தாம் செய்த⋆
துய்ய தமிழ் இருபத்து நான்கின் பாட்டின்
தொகை⋆ நாலாயிரமும் அடியோங்கள் வாழ்வே (17)

‡அந்தமிலா ஆரணங்கள் நாலாகி நின்ற⋆
அதன் கருத்தை ஆழ்வார்கள் ஆய்ந்தெடுத்து⋆
செந் தமிழால் அருள் செய்த வகை தொகையும்⋆
சிந்தாமல் உலகங்கள் வாழவென்று⋆
சந்த மிகு தமிழ் மறையோன் தூப்புல் தோன்றும்⋆
வேதாந்தகுரு மொழிந்த ப்ரபந்தசாரம்⋆
சிந்தையினால் அனு தினமும் சிந்திப்போர்க்குச்⋆
சேமமதாம் திருமால் தன் கருணை யாலே (18)

॥ சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com